

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.4.2025) நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் சிறப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும், வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், ஆகியவற்றின் தற்போதைய நிலை ஆகியவை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை வன அலுவலர் கௌதம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் 178 இடங்களில் - மின் நுகர்வோர் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்: பொதுமக்கள் புகார் மீது உடனடித் தீர்வு!

# பழுதான மின் மீட்டர்கள் - மின் கம்பங்கள் ஒரு வாரத்திற்குள் சரிசெய்யப்படும்!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தகவல்!

சென்னை, ஏப்.7-

மின் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நாள்தோறும் நலத்திட்டங்கள் வழங்கிடும் நல்லாட்சி நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மின்வாரிய செயற்பொறியாளர் கள்/ இ&ப (Executive Engineer / O&M Office) அலுவலகங்கள் என 178 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மின் நுகர்வோர் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்களின் வாயிலாக, மின் கட்டண குறைபாடு ( பெறப்பட்ட புகார்கள் 1394, தீர்வு காணப்பட்ட புகார்கள் 675), மின் அளவி குறைபாடு ( பெறப்பட்ட புகார்கள் 371, தீர்வு காணப்பட்ட புகார்கள் 203), சேதமடைந்த மின் கம்பங்கள் ( பெறப்பட்ட புகார்கள் 2278, தீர்வு காணப்பட்ட புகார்கள் 18), குறைந்த மின் அழுத்தம் ( பெறப்பட்ட புகார்கள் 1532, தீர்வு காணப்பட்ட புகார்கள் 12), பெயர் மாற்றம் உள்ளிட்ட மற்ற புகார்கள் ( பெறப்பட்ட புகார்கள் 5447, தீர்வு காணப்பட்ட புகார்கள் 1068 ) என மொத்தமாக 11022 புகார்கள் பெறப்பட்டு, உடனடியாக 1976 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது..

மேலும், பழுதடைந்த மின் மீட்டர்கள் வரும் செவ்வாய்க்கிழமைக்குள் மாற்றப்படும் என்றும், பழுதான மின் கம்பங்கள் 15 நாட்களுக்குள் மாற்றப்படும் என்றும், மேலும் மின் கட்டண வேறுபாடு குறித்த புகார்களுக்கு ஒரு வாரத்திற்குள் தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

# மணப்பாறை தொகுதியில் புதிய பேருந்து வழித்தடங்கள் - அரசு பரிசீலிக்கும்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, ஏப்.7-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, மணப்பாறை தொகுதி உறுப்பினர் ப. அப்துல் சமது எழுப்பிய வினாக்களுக்குப் பதிலளித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் “மணப்பாறை தொகுதியில் புதிய பேருந்து வழித்தடம் தேவை என்பது தொடர்பான கோரிக்கைகளை அரசு பரிசீலிக்கும்” என்று அறிவித்தார்.



சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ப. அப்துல் சமது:** மணப்பாறையிலிருந்து முசிறி மற்றும் நாமக்கல் வழியாக சேலம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் கோரியபடி மணப்பாறையிலிருந்து சேலத்திற்கு செல்வதற்கான வழித்தடத்தில் ஏற்கெனவே பேருந்துகள் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப.அப்துல்சமது:** மணப்பாறையிலிருந்து சேலத்திற்கு காலையில் பேருந்து வேண்டுமென்பதுதான் இப்போது கோரிக்கையாக இருக்கிறது. மாலை நேரத்தில் பேருந்துகள் இயக்கப்படுகிறது. அதற்கு நன்றி. மாலை நேரத்தில் அந்தப் பேருந்துகள் இயக்கப்படுவது அங்கிருந்து பெங்களூருவுக்ும், ஓசூருக்கும் போன்ற பெரு நகரங்களுக்கு செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, காலை நேரத்தில் சேலத்திற்கு பேருந்து இயக்கப்படுமா ?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** ஏற்கெனவே மாலை நேரத்தில் இயக்கப்படுகின்ற வழித்தடங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினரே சொல்லியிருக்கின்றார். அது புதுக்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட பொன்னமராவதியிலிருந்து அந்தப் பேருந்து மணப்பாறை வழியாக இயக்கப்படுகிறது. காலை நேரத்தில் கூடுதலாக இயக்குவதற்கு அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**ப. அப்துல் சமது:** மணப்பாறைக்கு ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை நம்முடைய திராவிட மாடல் அரசு தான் நிறைவேற்றி கொடுத்தது. இப்போது மூன்றாம் ஆண்டு, கிட்டத்தட்ட 800க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் அங்கே படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்று வருவதற்கு பேருந்து வசதி சரியான முறையில் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எனவே, மாணவ, மாணவியருக்கான சிரமத்தை நீக்குகின்ற வகையில் பேருந்து வசதி செய்துத் தரப்படுமா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் கடந்த வாரத்தில் தான் இந்த வழித்தடங்கள் தேவையென்று எழுத்துப்பூர்வமாகக் கொடுத்திருக்கிறார். உரிய அதிகாரிகளிடத்தில் ஆய்வு செய்ய சொல்லியிருக்கிறோம். தேவையிருப்பின் அவை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட

# வக்ஃபு வாரிய திருத்தத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

## காங்கிரஸ் - அகில இந்திய மஜ்லிஸ் கட்சிகள் தொடர்ந்தன!

புதுடெல்லி, ஏப்.7-

நாடாளுன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வக்ஃப் வாரிய திருத்த சட்டத்திற்கு எதிராக, காங்கிரஸ், அகில இந்திய மஜ்லிஸ் கட்சிகளின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளன.

கடும் எதிர்ப்புகளையும் மீறி, ஒன்றிய பாஜக அரசு, நாடாளுமன்றத்தில் வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை நிறைவேற்றி இருப்பது, நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. மசோதா வாபஸ் பெற வலியுறுத்தி, பல்வேறு மாநிலங்களில் போராட்டங்களும் வெடித்துள்ளன. இந்த நிலையில், வக்ஃப் திருத்தச் சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் காங்கிரஸ் மற்றும் அகில இந்திய மஜ்லிஸ் கட்சிகளின் சார்பில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. காங்கிரஸ் எம்.பி. முகமது ஜாவத் தொடர்ந்த வழக்கில்,

வக்ஃப் சொத்துகள் மற்றும் அவற்றின் நிர்வாகத்தின் மீது தன்னிச்சையாக கட்டுப்பாடுகளை திணிக்கும் இம்மசோதா, அரசமைப்புச் சட்டப் பிரிவுகளை மீறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுவோரிடம் மட்டுமே வக்ஃப் சொத்துகளை அர்ப்பணிக்க முடியும் உள்ளிட்டவை மசோதாவில் தெரிவித்திருப்பது அரசமைப்புச் சட்டத்தின்கீழ் செல்லாது என அறிவிக்கவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. மதத்தை பின்பற்றும் காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, வக்ஃப் சொத்துகளை உருவாக்குவதற்கான கட்டுப்பாடுகளை இம்மசோதா அறிமுகம் செய்துள்ளதாகவும், இஸ்லாமிய சட்ட வழக்கத்தின்படி, அடிப்படை உரிமையை மசோதா மீறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்து மத அறக்கட்டளைகள் இந்துக்களால் நிர்வகிக்கப்படும் நிலையில், வக்ஃப் நிர்வாக அமைப்புகளில் இஸ்லாமியர் அல்லாத உறுப்பினர்களை இடம்பெறச் செய்வது பாரபட்சமான தலையீடு எனவும், மத அமைப்புகள் மீதான கட்டுப்பாட்டை அரசு அதிகாரிகளிடம் ஒப்படைப்பது, வக்ஃப் நிர்வாகத்தில் தன்னாட்சியை நீர்த்துப் போகச் செய்வதாக உள்ளதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத சொத்துகள் மீதான கட்டுப்பாட்டை மதச்சார்பற்ற அதிகாரிகள் வசம் மாற்றுவது, மத ரீதியிலான உரிமையை மீறுவதாகும் என உச்சநீதிமன்றம் கடந்த 1954இல் அளித்த தீர்ப்புக்கு எதிராக இம்மசோதா உள்ளதாக தனது மனுவில் குறிப்பிட்டுள்ள காங்கிரஸ் எம்.பி. முகமது ஜாவத், ராம ஜென்மபூமி பாபர் மசூதி வழக்கு தீர்ப்பில் இக்கோட்பாடு உறுதி செய்யப்பட்ட நிலையில், அதற்கு எதிராக இத்திருத்தம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மஜ்லிஸ் கட்சித் தலைவர் அஸாதுதீன் ஒவைசி தாக்கல் செய்துள்ள மனுவில், வக்ஃப் சொத்துகள் மீதான சட்டபூர்வ பாதுகாப்புகளைப் பறிப்பது, இஸ்லாமியர்களைக் குறிவைக்கும் பாரபட்சமான நடவடிக்கையாகும் என தெரிவித்துள்ளார். வக்ஃப் வாரிய திருத்த சட்டத்திற்கு எதிராக திமுக சார்பிலும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, வக்ஃப் சட்டத்திருத்த மசோதா தொடர்பாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவசரமாக சந்திக்க நேரம் கோரியுள்ளதாக அனைத்து இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் தெரிவித்துள்ளது.



திருச்சி பஞ்சபூரில் கட்டப்பட்டு வரும் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே என் நேரு நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் , மாநகர காவல் ஆணையர் காமினி, மாநகராட்சி ஆணையர் சரவணன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி மாநகராட்சி மேயர் அன்பழகன் , பொறியாளர் சிவபாதம் , மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம், சேர்மன் துரைராஜ் ,மாத்தூர் கருப்பையா , காஜாமலை விஜய் மற்றும் கழக நிர்வாகிகள மண்டி சேகர், கோட்டத் தலைவர் துர்கா தேவி ,கிராப்பட்டி செல்வம், அந்தோணி, கருப்பையா உட்பட அதிகாரிகள் பலர் இருந்தனர்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நீர்வளத்துறையின் சார்பில் பாசன ஆதாரங்கள் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் 115 பணிகள் ரூபாய் 16.70 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு நேற்று முன்தினம் (05.04.2025) திருச்சிராப்பள்ளி நவல்பட்டு பகுதியில் உள்ள காற்றாற்றில் தூர்வாரும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியளார் சிவக்குமார், செயற்பொறியாளர்கள் ராஜேந்திரன், நித்யாநந்தம், உதவி செயற்பொறியாளர் கார்த்திக்கேயன். உதவி பொறியாளர் திருமதி.மேனகா, அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் ஆண்டிமடம் வடக்கு ஒன்றியம் அழகாபுரம் கிராமத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் ரெங்க.முருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமை கழக பேச்சாளர் திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன், தினகரன், சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் கலா சுந்தரமூர்த்தி, ஆர்.கலியபெருமாள், கே.சி.லூயிகதிரவன், க.கருப்புசாமி மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

